நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி. 44/2018

2018ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: செந்தில்முருகேசன் வயது: 38

த/பெ.(அ)க.பெ: எஸ்.எம்.மணி தொழில்: இன்ஜினியர்

ஊர் : முத்தூர் சமயம்: இந்து

வட்டம் : காங்கேயம் சாதி:

மாவட்டம் : திருப்பூர்

முதல் விசாரணை:-

நான் திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் சென்னையில் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன்.கடந்த 01.11.2017ம்தேதி இரவு சேரன் எக்ஸ்பிரஸ்சில் சென்னையில் இருந்து ஈரோடு சென்றுக்கொண்டிருந்தேன். நான் முன்பதிவு செய்து எஸ் 9 கோச்சில் படுக்கை எண்.71ல் பயணம் செய்தேன். சென்னையில் இருந்து அந்த ரயில் இரவு 10.10 மணிக்கு புறப்பட்டது. அதன் பிறகு நான் தூங்கிவிட்டேன். நள்ளிரவு 02.00 மணிக்கு நான் கண்விழித்து பார்த்த போது என்னுடைய படுக்கையில் நான் வைத்திருந்த பேக் அதில் இருந்த லேப்டாப் காணவில்லை. அந்த லேப்டாப் ACER கம்பெனி தயாரிப்பு ஆகும்.அருகில் இருந்தவர்களிடம் அந்த ரயில் எங்கு வந்திருக்கிறது என்று கேட்டேன். ஜோலார்பேட்டை என்று சொன்னார்கள். பிறகு நான் பயணச்சீட்டு பரிசோகதரிடம் , ரயில் இருந்த ரயில்வே போலீசாரிடம் புகார் சொன்னேன். அவர்கள் அருகில் இருந்த 2,3 பெட்டிகளில் தேடினார்கள்.அந்த சமயம் ரயில் வண்டி ஜோலார்பேட்டையை கடந்து சென்றுக்கொண்டிருந்தது. எனவே பயணச்சீட்டு பரிசோகதர் , ரயில் இருந்த ரயில்வே போலீசார் நான் இறங்கும் இடத்தில் எழுத்து முலமாக புகார் அளிக்க சொன்னார்கள். நான் ஈரோடு ரயில் நிலையத்தில் நான் இறங்கி இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னுடைய லேப்டாப் ஜோலார்பேட்டை ரயில் நிலைய எல்லைக்குள் காணாமல் போனதால் என்னுடைய புகாரினை ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்திற்கு அனுப்பி வைப்பதாக சொன்னார்கள். சுமார் 5,6 மாதம் கழித்து ஜோலார்பேட்டை ரயில்வே போலீசார் என்னை அழைத்து என்னுடைய லேப்டாப் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். நான் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து லேப்டாப்பை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த புகார் ஆகும், அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள லேப்டாப் நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டது ஆகும். அந்த புகைப்படம் அ.த.சா.ஆ. 2 ஆகும். நான் ஈரோடு ரயில்வே

போலீசாரிடம் புகார் அளித்ததை ஜோலார்பேட்டை போலீசார் என்னை போன் மூலம் அழைத்து போன் மூலம் விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

சென்னையில் இருந்து திருப்பூருக்கு செல்வதற்காக ரயில் சென்றுக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எந்த தேதி என்றால் 01.11.2017ஆகும். சென்னையில் எத்தனை மணிக்கு ரயிலில் ஏறினேன் என்றால் இரவு 10.10 மணிக்கு வண்டி புறப்பட்டது.முன்பதிவு செய்து நான் படுக்கை வசதி கொண்ட ரயிலில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். ஜோலார்பேட்டையை கடந்த பின்பு தான் எனது லேப்டாப் காணாமல் போன விபரம் தெரியும் என்றால் சரிதான். எந்த இடத்தில் வைத்து லேப்டாப் காணமால் என போனது என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் நான் பயணம் செய்த ரயில் பெட்டியில் விளக்குகள் அணைக்கப்பட்டியிருந்தது என்றால் சரிதான்.ரயிலில் காவலுக்கு இருந்த அதிகாரிகளிடம் எழுத்து மூலமாக புகார் அளிக்கவில்லை. வாய்மொழியாக தான் சொன்னேன். நான் இறங்கிய பின்பு தான் புகார் கொடுத்தேன் என்றால் ஈரோடு ரயில் நிலையத்தில் புகார் கொடுத்தேன். லேப்டாப்பை யார் நேரிடையாக எடுத்து சென்றார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். லேப்டாப்பின் வரிசை எண் தெரியுமா என்றால் தெரியாது.யார் திருடினார்கள் என தெரியாது என்றால் சரிதான்.

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி. 44/2018

2018ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: பழனி வயது:39

த/பெ.(அ)க.பெ: முனுசாமி தொழில்: கேண்டினில் சாப்பாடு வியாபாரம்

ஊர் : தாமலேரிமுத்தூர் சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் தாமலேரிமுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஜோலார்பேட்டை ரயில்வே கேண்டினில் சாப்பாடு வியாபாரம் செய்கிறேன்.சுமார் ஒருவருடத்திற்கு முன்பு நான் என்னுடைய வழக்கமான விற்பனை பணியில் இருந்த போது, ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் முதலாவது நடைப்பாதையில் காலை சுமார் 06.00மணிக்கு கூட்டமாக இருந்தததை பார்த்தேன்.நான் அருகில் சென்று பார்த்தேன்.போலீசார் ஏதோ திருட்டு வழக்கு சம்மந்தமாக விசாரித்துக்கொண்டு எழுதிக்கொண்டிருந்தார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து போடும்படி கேட்டார்கள். நான் வியாபாரம் செய்யும் அவசரத்தில் கையெழுத்து போட்டுவிட்டு வந்துவிட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துமட்டும் அ.த.சா.ஆ.3 ஆகும். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான்.அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.4 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

( சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி):-

கடந்த 21.01.2018ம்தேதி என்முன்னிலையில் போலீசார் வழக்கின் எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அங்கு இருந்த ஒரு நபரிடம் இருந்து லேப்டாப் செல்போன் போன்றவற்றை வாங்கி போலீசார் வைத்துக்கொண்டார்கள். நான் அதை மட்டும் தான் பார்த்தேன். எதிரி தானாகமுன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் அவரிடம் இருந்து கைப்பற்றுதல் மகஜரின் மூலம் பொருட்களை கைப்பற்றியதற்காக தான் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன்

என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

எ.த.கு.வி:-

எழுதாத தாளில் தான் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி. 44/2018

2018ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: சண்முகம் வயது:36

த/பெ.(அ)க.பெ: சி.மணி தொழில்: கேண்டினில் டீ வியாபாரம்

ஊர் : வக்கணம்பட்டி சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் வக்கணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஜோலார்பேட்டை ரயில்வே கேண்டினில் டீ வியாபாரம் செய்கிறேன். கடந்த 21.01.2018ம்தேதி சுமார் 06.30 மணிக்கு ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் முதலாவது நடைப்பாதையில் நான் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன். போலீசார் மற்றும் பயணிகள் ஆகியோர் ஒரு இடத்தில் கூட்டமாக இருந்தததை பார்த்தேன்.நான் அருகில் சென்று பார்த்தேன்.போலீசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். செல்போன் மற்றும் சில பொருட்கள் திருடு போனது சம்மந்தமாக அவரிடம் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நபரை கூட்டத்தில் பார்த்ததால் தற்போது தனியாக பார்த்து அடையாளம் சொல்ல இயலாது. அதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துமட்டும் அ.த.சா.ஆ.5 ஆகும். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான்.அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.6 ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

( சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி):-

கடந்த 21.01.2018ம்தேதி என்முன்னிலையில் போலீசார் வழக்கின் எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அங்கு இருந்த ஒரு நபரிடம் இருந்து லேப்டாப் செல்போன் போன்றவற்றை வாங்கி போலீசார் வைத்துக்கொண்டார்கள். நான் அதை மட்டும் தான் பார்த்தேன். எதிரி தானாகமுன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் அவரிடம் இருந்து கைப்பற்றுதல் மகஜரின் மூலம்

பொருட்களை கைப்பற்றியதற்காக தான் நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

எ.த.கு.வி:-

எழுதாத தாளில் தான் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான்.

ம.வி:-

இல்லை